செய்தி வெளியீடு எண்: 360 நாள்: 05.06.2018

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 4.6.2018 அன்று தலைமைச் செயலகத்தில், மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக சிறப்பாக செயலாற்றியமைக்காக தஞ்சாவூர், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு 2017–ஆம் ஆண்டிற்கான பசுமை விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள். மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கிய தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் 2017–ஆம் ஆண்டிற்கான பசுமை விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 48–ன்படி, சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதும், நாட்டின் வளங்களைப் பாதுகாத்துப் பேணுவதும் மாநிலத்தின் பொறுப்பு. இதனைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மாநிலத்தின் உயிரின வாழ்க்கைச் சூழலைப் பேணி பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளித்து வருகிறது.

அதன்படி, மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக சிறப்பாக செயலாற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனும், மாசு தடுப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கும் தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களைப் பாராட்டும் வகையிலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆண்டுதோறும் மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மூன்று தொழில் நிறுவனங்கள் மற்றும் மூன்று கல்வி நிறுவனங்களைத் தேர்வு செய்து பசுமை விருதினை வழங்கி வருகின்றது.

அதன்படி, 2017–ஆம் ஆண்டிற்கான பசுமை விருதுகளை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., ஆகியோருக்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் பசுமை விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

மேலும், மாசு தடுப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கிய தொழில் நிறுவனங்களுக்கான 2017–ஆம் ஆண்டிற்கான பசுமை விருதுகளை, கடலூர் மாவட்டம் – திருவாளர்கள் ஐ.எல் & எப்.எஸ் தமிழ்நாடு பவர் கம்பெனி லிமிடெட்., திருவள்ளூர் மாவட்டம் – திருவாளர்கள் யுனைடெட் ப்ரூவரிஸ் லிமிடெட்., நாமக்கல் மாவட்டம் – திருவாளர்கள் சேஷசாயி பேப்பர் & போர்ட்ஸ் லிமிடெட்., ஆகிய நிறுவனங்களுக்கும்; சுற்றுச்சூழல் மேம்பாட்டில் சிறந்து விளங்கிய கல்வி நிறுவனங்களுக்காக 2017–ஆம் ஆண்டு பசுமை விருதுகளை, வேலூர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், (வி.ஐ.டி), திருச்சிராப்பள்ளி – தேசிய தொழில்நுட்ப கழகம், திண்டுக்கல் மாவட்டம் – காந்திகிராமம் கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், ஆகிய கல்வி நிறுவனங்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் பசுமை விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி. கருப்பணன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) திரு.ஆர்.கே. உபாத்யாய், இ.வ.ப., தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர் செயலர் திரு.டி.சேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 5.6.2018**